**சுருக்கம்**

பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திருமதி.K.பரமேஸ்வரி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டது – உரிய விதிகளைத் தளர்த்தி பணி வரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

**அரசாணை (டி) எண்.362** **நாள் 23.11.2023**

**சோபகிருது, கார்த்திகை - 07,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ) துறை, நாள். 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/ கே2/2018-1, நாள் 04.12.2020.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.35661/கே2/2019, நாள் 30.07.2021 மற்றும் 11.03.2022.

-----------

**ஆணை:**

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பதிவுத்துறை தலைவரின் கடிதத்தில் பதிவுத்துறையில், திண்டுக்கல் பதிவு மாவட்டம், வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிகையில் 13.09.2016 அன்று பணியிடை மரணமடைந்த திரு.P.கிருஷ்ணமூர்த்தி, என்பவரின் மனைவி திருமதி.K.சித்ரலேகா என்பவர் தனது திருமணமான மகள் திருமதி.K.பரமேஸ்வரி என்பவருக்கு கருணையடிப்படையில் பணிநியமனம் வழங்ககோரி 29.07.2019 அன்று மனு அளித்தார் என்றும், அவரது கோரிக்கையினை பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திருமதி.K.பரமேஸ்வரி, கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிகப்பட்ட நடவடிக்கைகளில் திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டத்தில் பணிநியமனம் வழங்கியுள்ளார் என்றும், மேற்படி ஆணைப்படி திருமதி.K.பரமேஸ்வரி 16.12.2020 முற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும், அவரது தற்காலிக பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்துவதற்கு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. திண்டுக்கல் பதிவு மாவட்ட வத்தலக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிகையில் 13.09.2016 அன்று பணியிடை மரணமடைந்த

திரு.P.கிருஷ்ணமூர்த்தி என்பவரது திருமணமான மகள் திருமதி.K.பரமேஸ்வரி என்பவருக்கு 2016-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 15 மற்றும் பணப்பலன் நியமன நாளிலிருந்து வழங்க ஏதுவாக, மேற்படி சட்டப்பிரிவு 28(2)-ஐயும் தளர்வு செய்து பதிவுத்துறையில் திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள மேற்படி தனியருக்கு அவர் பணியேற்பு செய்துள்ள 16.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவரது பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுபெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. 2016 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப்பிரிவு 58-ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.K.பரமேஸ்வரி என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணி நியமனம் பெற்ற நாள் முதல் வரன்முறை செய்வதற்கு ஏதுவாக, தனியர் பொருட்டு 2016 ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவு 15-ம், பணப்பலன் நியமன நாளிலிருந்து வழங்க ஏதுவாக, மேற்படி சட்டப்பிரிவு 28(2)-ஐயும் தளர்த்தி தமிழக ஆளுநர் அவர்களால் ஆணையிடப்படுகிறது.

4. இவ்வாணை, மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.4966350/ஜி/2023, நாள் 21.08.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**பா.ஜோதி நிர்மலாசாமி**
**அரசு செயலாளர்**

<u>பெறுநர்:</u>

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28. (இணைப்புடன்)
திருமதி.K.பரமேஸ்வரி,
இளநிலை உதவியாளர், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம்.
(பதிவுத்துறை தலைவர், சென்னை - 28 வழியாக)

<u>நகல்:</u>

மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

24/11/2023.
**பிரிவு அலுவலர்**

24/11/23